| 52 | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | 08.10.2013 |

| | | |
|---|---|---|
| 53 | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் | 22.10.2013 |
| 54 | இடர் முகாமைத்துவ நிலையம் | 23.10.2013 |
| 55 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தாபனம் | 24.10.2013 |
| 56 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | 25.10.2013 |
| 57 | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் | 05.11.2013 |
| 58 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 02.12.2013 |
| 59 | தேசிய இளைஞர் சேவை மன்றம் | 03.12.2013 |
| 60 | நகர அபிவிருத்தி அதிகாரசபை | 04.12.2013 |
| 61 | இலங்கை நியமங்கள் நிறுவகம் | 05.12.2013 |
| 62 | த அசோசியேடட் நியூஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் | 09.12.2013 |
| 63 | மத்திய சுற்றாடல் அதிகாரசபை | 10.12.2013 |
| 64 | கொழும்பு பல்கழலைக்கழகம் | 11.12.2013 |
| 65 | புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் | 12.12.2013 |
| 66 | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 13.12.2013 |
| 67 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | 17.12.2013 |

## (vii) பொது மனுக்கள் பற்றிய குழு

2013ஆம் ஆண்டிற்கான முதலாவது குழுக் கூட்டம் 2013.02.06இல் நடைபெற்றது. இவ்வருடத்தின் போது இரண்டு விசேட குழுக் கூட்டங்களும் 32 பொதுவான குழுக் கூட்டங்களும் நடைபெற்றன. இவற்றில் 172 மனுக் கோப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டு 49 மனுதாரர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

மனுக்களை விசாரித்த பின்னர் குழு மேற்கொள்ளும் விதப்புரைகளை / தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும்போது அதன் நடவடிக்கைமுறை விதிகள் காரணமாக எழுகின்ற முரண்பாடுகளினால் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துகையில் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதுள்ளதை கவனத்தில் கொண்ட குழு, செயலாளரின் பங்கேற்புடன் மேலே சொல்லப்பட்ட இரண்டு விசேட கூட்டங்களை நடத்தி அவ்விரு கூட்டங்களின் இறுதியிலும் எடுக்கப்பட்ட இறுதித் தீர்மானம் பொது மனுக்குழு மற்றும் பகிரங்க சேவைகள் ஆணைக்குழு ஆகியவை ஏதேனும் முரண்பாடுகளைத் தவிர்த்து தமது கடமைகளை எவ்வாறு நடத்த வேண்டும் என்பது பற்றி சட்டத்துறைத் தலைமை அதிபதியின் ஆலோசனையை நாடுவதாகும்.

| | | |
|---|---|---|
| 2013ஆம் ஆண்டில் குழுவிற்குக் கிடைக்கப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை | - | 536 |
| நிலையியல் கட்டளைகளுக்கு முரணாக உள்ள காரணத்தினால் நிராகரிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 112 |
| 2013ஆம் ஆண்டில் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 343 |
| கௌரவ சபாநாயகரின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை (2012ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மனுக்கள் அடங்கலாக) | - | 376 |

**கௌரவ சபாநாயகரின் அங்கீகாரத்தின் பேரில்**

| | | |
|---|---|---|
| அமைச்சு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 509 |
| நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மன்) சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 91 |
| குழுவினால் பரிசீலிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 497 |
| நிவாரணமளிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 49 |
| விசாரணை முடிவுற்ற மனுக்கள் | - | 172 |

### 5.2.3 தெரிகுழுக்கள்

**i. இலங்கை மக்களுக்கு ஒரே தேச மக்களாக வாழ்வதற்கு தத்துவம் அளிப்பதற்கான அரசியல் மற்றும் அரசியலமைப்பு நடவடிக்கைகள் பற்றி விதந்துரைத்து அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரிகுழு**

பாராளுமன்றச் சபை முதல்வர் கௌரவ நிமல் சிறிபால த சில்வா அவர்களின் தலைமையின் கீழ் தெரிகுழு தாபிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டின்போது 11 குழுக்கூட்டங்கள் நடைபெற்றன.

இக்குழுவின் நியதிகளுக்கு அமைவான 109 பொதுமக்கள் முறையீடுகள் குழுவுக்குக் கிடைக்கப்பெற்றதுடன் அத்தகைய 37 முறையீடுகள் குழு முன்னிலையிலான வாய்மூல சாட்சியத்துக்கென அழைக்கப்பட்டன.

குழுவின் நியதிகளுக்கிணங்க தத்தமது முறையீடுகளைச் சமர்ப்பிக்குமாறு 64 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளிடம் குழு வேண்டுகோள் விடுத்திருந்தது.

## ii. 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட அமைச்சுகளின் செலவினத் தலைப்புளைப்பற்றிக் கலந்துரையாடுவதற்கான தெரிகுழு

வரவு செலவுத் திட்டத்தில் குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான காலப்பகுதியைக் கருத்தில் கொண்டு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் தீர்மானிக்கப்பட்ட அமைச்சுகளின் செலவினத் தலைப்புகளைக் கலந்துரையாடுவதற்கென தெரிகுழு ஒன்று நியமிக்கப்படுகின்றது. பின்வரும் 23 அமைச்சுகள், 10 விசேட நோக்கங்களுக்கான செயலகங்கள் ஆகியவற்றின் செலவினத் தலைப்புகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக பாராளுமன்ற சபை முதல்வர் கௌரவ நிமல் சிறிபால த சில்வா அவர்களின் தலைமையின் கீழ் 21 உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழு ஒன்று நியமிக்கப்பட்டது.

1. விசேட நோக்கங்களுக்கான செயலகங்கள்

    i. நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சர்
    ii. மனித வளங்கள் அமைச்சர்
    iii. கிராமிய அலுவல்கள் அமைச்சர்
    iv. உணவுப்பாதுகாப்பு அமைச்சர்
    v. நகர அலுவல்கள் அமைச்சர்
    vi. சமூக நலன்புரி அமைச்சர்
    vii. நுகர்வோர் நலன்புரி அமைச்சர்
    viii. தேசிய வளங்கள் அமைச்சர்
    ix. விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர்
    x. சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சர்

2. பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சு
3. சமூக சேவைகள் அமைச்சு
4. மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சு
5. தேசிய மரபுரிமைகள் அமைச்சு
6. கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு
7. தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
8. மீள்குடியேற்ற அமைச்சு
9. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
10. தாவரவியல் பூங்காக்கள், பொழுதுபோக்கு அமைச்சு
11. வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு

12. உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சு
13. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
14. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு
15. தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு
16. சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு
17. தபால் சேகைள் அமைச்சு
18. தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு
19. அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு
20. தொழில், தொழில் உறவுகள் அமைச்சு
21. அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு
22. கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு
23. சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு
24. பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

2013 டிசம்பர் 02 ஆம் திகதியிலிருந்து 2013 டிசம்பர் 09 ஆம் திகதி வரை, ஒதுக்கீட்டு சட்டமூலம் (2014) இரண்டாம் மதிப்பீடு ஆரம்பத்திலிருந்து கௌரவ அமைச்சர்கள், கௌரவ பிரதி அமைச்சர்கள், கௌரவ உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அலுவலர்கள் ஆகியோரின் பிரசன்னத்துடன் குழு அதன் கூட்டத்தை எட்டுத் தினங்கள் நடத்தி பாராளுமன்றத்தில் ஒரு முழுமையான அறிக்கையையும் சமர்ப்பித்தது. குழுவில் கலந்தாலோசிக்கப்பட்ட அனைத்து விடயங்களையும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்ட பெறுமதியான ஆலோசனைகளையும், அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளையும் குழுநிலை நிகழ்ச்சித்திட்டத்தின்போது பரிசீலிப்பதற்கு குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களையும் அறிக்கை உள்ளடக்கியிருந்தது.

**தற்காலிகக் குழு**

**பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம்**

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியமானது அனைத்து பெண் பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாகும். இது இலங்கையில் சிறுமிகள் மற்றும் பெண்கள் ஆகியோரை வலுவூட்டவும் அவர்களுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறை மற்றும் துன்புறுத்தல் ஆகியவற்றை ஒழிப்பதற்கு காலந்தாலோசித்து ஒன்றிணைந்து செயலாற்றுவதற்காக நிறுவப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியமானது பல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், பயிற்சிகள் மற்றும் மாநாடுகளை ஆரம்பித்தது.

## 5.3 சட்டமூல அலுவலகம்

2013 ஆம் ஆண்டு இந்த அலுவலகம் சட்டமூலங்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உரிய முறையில் தயாரித்தல், ஒப்பிட்டுப் பார்த்தல் என்பவற்றுடன், அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க அவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் வரை அவை தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

* 2013ஆம் ஆண்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 87 சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையில், 36 சட்டமூலங்கள் (34 அரசாங்க சட்டமூலங்கள், 02 தனியார் உறுப்பினர் சட்டமூலங்கள்) சட்டமாக்கப்பட்டன.

**(தயவு செய்து 2013 ஆம் ஆண்டின் சட்டங்களின் பட்டியலை பின் இணைப்பு 02 இல் பார்க்கவும்.)**

* அதே போன்று சட்டமூல அலுவலகம் சட்டமூலங்களையும், குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட நியதிச் சட்டங்களின் நகல் பிரதிகளையும் பரிசீலனை செய்யும் சட்டவாக்க நிலையியற் குழுவின் கூட்டங்களைக் கூட்டுவதற்கான சகலவிதமான ஏற்பாடுகளையும் மற்றும் குழுவின் அறிக்கைகளை மும்மொழிகளிலும் தயாரிக்கும் பணியையும் மேற்கொண்டது. அதன் பிரகாரம், இக்காலப்பகுதியில் 05 சட்டவாக்க நிலையியல் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. குழுக்கள் தனியார் உறுப்பினர் சட்டமூலங்களைப் பரிசீலித்தன.

2013 ஆம் ஆண்டு சட்டமூல அலுவலகம், மேலதிகமாக பின்வரும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

அ) பாராளுமன்ற இணைய அகத்தில் (intranet) பதிவேற்றம் செய்யப்பட்ட சட்டவாக்க சேவைகள் பற்றிய தகவல்களை பாராளுமன்ற இணையத் தளத்தின் ஊடாக மும்மொழிகளிலும் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான வசதிகளை பொதுமக்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்பாடு செய்தல்.

ஆ) 2010 ஆம், 2011 ஆம், 2012 ஆம் ஆண்டுகளின் சட்டமூலங்கள் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்புகளைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடல்.

இ) சட்டமூலங்கள் தொடர்பான சட்டவாக்கத் தகவல் முறைமையை இற்றைப்படுத்தல்.

ஈ) பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுகள், மாகாண சபைகள் மற்றும் பலதரப்பட்ட நிறுவனங்களினது வேண்டுகோளுக்கிணங்க சட்டமூலங்கள் தொடர்பான தகவல்களைப் பரப்புதலும் அவற்றை அனுப்பும் நடவடிக்கைமுறையும்.

### 5.4 சபை ஆவண அலுவலகம்

***2013 ஆம் ஆண்டு, *89 பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றன. பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன:**

i. எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் பிரேரணைகள் மற்றும் வாய்மூல விடைக்கான வினாக்களை உள்ளிட்ட பாராளுமன்ற அமர்வு தொடர்பான மூன்று ஒழுங்குப் புத்தகங்களுடன் அவற்றுடன் தொடர்பான 26

அனுபந்தங்கள், 89 பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பான ஒழுங்குப் பத்திரங்களும் கூட்ட அறிக்கைகளும் ஆகியவை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டன.

**ii.** மேற்குறிப்பிட்ட அச்சிடப்பட்ட ஒழுங்குப் புத்தகங்கள், அனுபந்தங்கள் மற்றும் ஒழுங்குப் பத்திரங்கள் ஆகியவற்றை எல்லா பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய திணைக்களத் தலைவர்களை உள்ளிட்ட அமைச்சர்களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் விரைவுத் தபால் மூலம் வினியோகிப்பதற்கும் அவற்றை அவர்களின் மேசைகளின் மீது வைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**iii.** ஒவ்வொரு அமைச்சினாலும் அனுப்பப்பட்ட அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் 392 செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் வருடாந்த அறிக்கைகள் ஆகியவற்றை சமர்ப்பிப்பதற்கும் ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் கீழான தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் வரவு செலவு திட்ட ஆதரவு சேவைகள் மற்றும் நிகழ்தகு பொறுப்பு கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடு தொடர்பான 10 அறிக்கைகள், பல சட்டங்களினால் விதிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குகள் மற்றும் ஒழுங்கு விதிகளைஉள்ளடக்கிய87 பிரேரணைகள் ஆகியவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

iv. பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 1398 வாய்மூல விடைக்கான வினாக்கள் நிலையியற் கட்டளைகளுக்கு இணங்க தொகுத்து சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 379 வாய்மூல வினாக்கள் உள்ளடங்களாக 719 வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அவற்றிற்கு 2012இல் நேரம் எடுக்கப்பட்டது.

v. 24 தனியார் உறுப்பினரின் பிரேரணைகள் மற்றும் 03 திகதியிடப்படாத பிரேரணைகள் ஆயவற்றை தொகுத்து சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்து அவற்றை ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

vi. பாராளுமன்ற அலுவல்கள் குழுவின் 30 அமர்வுகளைக் கூட்டி சம்பந்தப்பட்ட கூட்ட அறிக்கைகளை மூன்று மொழிகளிலும் வெளியிடவும் சொல்லப்பட்ட தீர்மானங்களின் பின்னணியை பின்தொடர்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

vii. அதிமேதகு சனாதிபதியின் 12 அறிவித்தல்கள், சபாநாயகரின் 67 அறிவித்தல்கள், 35 அரசாங்க சட்டமூலங்கள் உள்ளடங்கலான 82 சட்டமூலங்கள், சட்டமூலங்கள் பற்றிய உயர் நீதிமன்ற தீர்ப்புக்கள் மற்றும் அமைச்சர்களின் ஆவணங்கள் சமர்ப்பித்தல் போன்றவற்றை உள்ளடக்கிய அமர்வு தின நடவடிக்கைகளின் நிகழ்ச்சிநிரலை தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 5.5 நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளின் பங்களிப்புகள் பற்றிய சுருக்கம்:

(1) படைக்கலச் சேவிதர் திணைக்களம்

(i) கௌரவ சபாநாயகர் மற்றும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகியோரின் பணிப்புரைக்கு அமைய பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்யும் பாடசாலை பிள்ளைகள், மாணவ பாராளுமன்றக் குழுக்கள், இளைஞர் பாராளுமன்றக் குழுக்கள் மற்றும் முதியோர் அமைப்புக்கள் மற்றும் கௌரவ அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விஜயம் செய்யும் சம்பந்தப்பட்ட குழுக்கள் ஆகியவற்றுக்கு 38 விஷேட விரிவுரைகள் தொலைக்காட்சியினட உதவியுடன் நடாத்தப்பட்டன. அவற்றுக்கு மேலதிகமாக பின்வரும் நிகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

- விஷேட சமய வைபவங்களை ஒழுங்கு செய்தல்.
- வெளிநாட்டு பாராளுமன்ற பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டு பாராளுமன்ற தூதுக்குழுக்கள் விஜயம் செய்யும் தருணங்களில் பொருத்தமான வைபவரீதியான நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்.
- வெளிநாட்டு தொடர்புகள் மற்றும் ஒழுங்கு மரபு அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்படும் வைபவங்கள் மற்றும் செயலமர்வுகள் ஆகியவற்றுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குதல்.
- பாராளுமன்றத்தை சூழ கட்டிடங்கள் நிர்மாணக் செய்வது தொடர்பில் பாதுகாப்பு தடை நீக்க சான்றிதழ்கள் வழங்கல்.

2013ஆம் ஆண்டில் உத்தியோக பூர்வ கடமைகள் நிமித்தம் மற்றும் அமர்வுகளை பார்வையிட விஜயங்களை மேற்கொண்ட அலுவலர்கள்/விருந்தினர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுக்கள் தொடர்பான விபரங்கள் சில பின்வருமாறு:

| விபரங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| அரசாங்க அலுவலர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் | 230 |
| அரசாங்க அலுவலர் கூடத்துக்கான அனுமதிப் பத்திரங்கள் | 258 |
| பத்திரிகை நிருபர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் | 129 |

| | |
|---|---|
| வழங்கப்பட்ட மொத்த கலரி அனுமதிப் பத்திரங்கள் | 13,420 |
| பாராளுமன்றத்தை/ அமர்வை பார்வையிடுவதற்கு வழங்கப்பட்ட குழு அனுமதிப் பத்திரங்கள் | 3,130 |
| குழுக்களாக வருகை தந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை | 195,353 |
| மாதாந்தம் (அண்ணளவாக) | 16,480 |

**(2) ஹன்சாட் திணைக்களம்**

2013ஆம் ஆண்டில் நடைபெற்ற 87 பாராளுமன்ற அமர்வுகள் ஹன்சாட் அறிக்கையிடலுக்கு உட்படுத்தப்பட்டன.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குக் குழு, உயர் பதவிகள் பற்றிய குழு, பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம், நிலையியற் குழுக்கள், ஆலோசனைக் குழுக்கள், (விசேட) மற்றும் அனைத்து தெரி குழுக்கள் ஆகியவற்றால் இவ்வாண்டில் நடாத்தப்பட்ட 157 கூட்டங்கள் அறிக்கையிடலில் உள்ளடக்கப்பட்டன.

எதிர்கால ஆய்வு நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு பாராளுமன்றத்தினதும் கால அறிக்கைகளை உள்ளடக்கிய தொடர்ச்சியான சூசிகையிடல் மற்றும் வகைப்படுத்தப்பட்ட விடய பதிவேடுகள் ஆகியவற்றை பேணி வருதல். பாராளுமன்ற கூட்டங்கள் மற்றும் அனைத்து குழுக்களின் ஒலிப்பதிவுகளைப் பேணிவருதல்.

- சபை நடவடிக்கைகள் பற்றிய இறுவட்டுக்களை வழங்குவதற்கான தடை நீக்கம் மேற்கொள்ளப்பட்டது.

**(3) பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் அலுவலகம்**

2013ஆம் ஆண்டில் நடைபெற்ற 87 பாராளுமன்ற அமர்வுகள் மற்றும் பல்வேறு குழுக் கூட்டங்களில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளின் சமகால உரைபெயர்ப்புக்கள் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வழங்கப்பட்டன.

- (பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படுகின்ற) வாய்மூல விடைக்கான வினாக்கள் மொழிபெயர்க்கப்பட்டன. உரைபெயர்ப்பாளர் அலுவலகத்தில் ஒவ்வொரு பிரிவாலும் மொழிபெயர்க்கப்பட்ட வினாக்களின் எண்ணிக்கை கீழே தரப்படுகிறது;

சிங்கள/ஆங்கிலப் பிரிவு: 1302, சிங்கள/தமிழ்ப் பிரிவு: 1110,
தமிழ் / ஆங்கிலப் பிரிவு:270

இவற்றிற்கு மேலதிகமாக, ஒத்திவைப்புப் பிரேரணைகள், தனியார் உறுப்பினர் பிரேரணைகள், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு அறிக்கைகள், கணக்காய்வுக் குறிப்புகள், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அறிக்கைகள், தெரிகுழு அறிக்கைகள் போன்ற வேறு ஆவணங்களும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

- பொது மனுக்கள் பற்றிய குழுவினால் அனுப்பப்பட்ட 395 மனுக்களின் சாராம்சங்கள் (சிங்களம்) தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பத்திரிகை விளம்பரங்கள், முன்அறிவித்தல்கள், கடிதங்கள், ஒத்திவைப்புப் பிரேரணைகள், அறிக்கைகள், தனியார் உறுப்பினர் பிரேரணைகள் போன்றன சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டன.

- பாராளுமன்ற வருடாந்த செயலாற்றுகை அறிக்கை, பொதுமனுக் குழு அறிக்கை மற்றும் காணிப் பிரிவிடல் தீர்ப்பு (திருத்தம்), கௌரவ சபாநாயகர் அலுவலகத்தில் இருந்து கிடைத்த ஆவணங்கள், இயற்கை அனர்த்தங்கள் பற்றிய தெரிகுழு அறிக்கை போன்ற ஆவணங்கள் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டன.

### 4) பாராளுமன்ற நூலகம்:

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட குறித்த ஆண்டில், கௌரவ பிரதம அமைச்சர், கௌரவ சபாநாயகர், கௌரவ அமைச்சர்கள் மற்றும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களது பல்வேறு விதமான தகவல் கோரிக்கைகளை பாராளுமன்ற நூலகம் நிறைவேற்றியது. மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

- சுமார் 663 புத்தகங்களையும் வேறு ஆவணங்களையும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நூலகம் இரவலாக வழங்கியதுடன் ஒட்டு மொத்த பணியாட்டொகுதியினரதும் பங்களிப்பைத் தேவைப்படுத்தும் புள்ளிவிபரங்கள், கையேடுகள், கலைக்களஞ்சியங்கள், குறிப்பிடத்தக்க மேற்கோள்களைக் கொண்ட அகராதிகள் போன்றவற்றை உள்ளிட்ட பல தகவல் மூலங்களை ஆராய்ந்து தேசிய முக்கியத்துவம் மிக்க விடயங்களை குறித்தாராய்வதற்கான உடனடி தகவல்கள் தேவைகளை பூர்த்தி செய்துள்ளது.

- கழிந்த வருடத்தில், கௌரவ உறுப்பினர்கள் இலகுவாக அறிந்துகொள்வதற்காக இலங்கையின் தினசரி செய்தித்தாள்களிலிருந்து பெறப்பட்ட தேசிய முக்கியத்துவம் மிக்க பல விடயங்களுக்கு ஆதரவான கிட்டத்தட்ட 1150 செய்திக்குறிப்புகளும் 350 விசேட கட்டுரைகளும்

நிழற்பிரதிகளாகவும் 'ஸ்கேன்' பிரதிகளாகவும் நூலகத்தினால் முனைப்பாக வழங்கப்பட்டுள்ளன.

- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்ப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் கீழுள்ள நூலக வளங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெறப்பட்டு பிரதான சேகரிப்பில் வைக்கப்பட்டுள்ளன.

புத்தகங்கள்/தனிநூல்கள் - 639 செய்தித்தாள்கள் - 42
உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சஞ்சிகைகள் - 20.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் நூலக ஆராய்ச்சிப் பிரிவு கீழ்வரும் பணிகளை பூர்த்தி செய்துள்ளது.

- 179 உறுப்பினர்களது கோரிக்கைகள், 07 செயலக அலுவல்கள்,18 பின்னணிக் குறிப்புகள், 17 உரைகள், 01 தொழில்நுட்ப அறிக்கை, 03 ஆய்வுப் பத்திரங்கள் மற்றும் 04 விசேட ஒப்படைகள்.

- மேலதிகமாக, ஆராய்ச்சிப் பிரிவு ஆராய்ச்சிச் சஞ்சிகை தொகுதி 1 இலக்கம் 03, 2013ஐ வெளியிட்டுள்ளது.

- அதைத்தவிர. செயலாளர் நாயகம், அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் உட்பட பாராளுமன்ற ஊழியர்கள் மற்றும் பொது மக்களது கிட்டத்தட்ட 250 தகவல் தேவைகளுக்கு நூலகம் பதில் நடவடிக்கை மேற்கொண்டது.

### 5) தாபன/ உறுப்பினர் சேவைகள் அலுவலகங்கள்/ உள்ளக கணக்காய்வு அலுவலகம்:

i. 2013ஆம் ஆண்டில் 18 பாராளுமன்ற பணியாட்டொகுதி உத்தியோகத்தர்கள் பல்வேறு விதமான வெளிநாட்டுப் பயிற்சிகள்/ ஆய்வுச் சுற்றுலாக்கள்/ மாநாடுகளுக்கு சமுகமளித்தனர். இவர்களில் சிலருக்கு பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி அனுசரணை மூலம் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

ii. பல்வேறு பதவிகளை வகிக்கும் 39 பாராளுமன்ற பணியாட்டொகுதி அங்கத்தவர்களுக்கு இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகம் (SLIDA), 'ஸ்கில்ஸ் ரிவலொப்மண்ட் லிமிரட்' (SDFL) ஆகியவற்றில் பயிற்சிகள் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன் 'மார்ஸ் பப்ரிக் பார்க்கில்' 100 அலுவலர்களுக்கு வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றில் பங்குகொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

iii. 2013ஆம் ஆண்டில் பணியாட்டொகுதி அங்கத்தவர்களின் நன்மைக்காக 02 பொது விரிவுரைகள், பட்டறைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

iv. பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் தமது அலுவலக விடயங்களை பூர்த்தி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட வசதிகளையும் சேவைகளையும் முறையாக உரிய நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தில் உள்ள சம்பந்தப்பட்ட பிரிவுகளால் மற்றும் வேறு வெளிப்பிரிவுகளால் வழங்கப்படுவதை உறுப்பினர் சேவைகள் அலுவலகம் உறுதி செய்தது.

v. கணக்காய்வு, முகாமைத்துவ குழுவின் செயற்பாடுகள், விசாரணைகள்,முன் கணக்காய்வு செய்தல், கோரப்படாத ஓய்வூதிய கோவைகள் தொடர்பாக பரிசீலனை செய்தல் மற்றும் சான்றுப்படுத்தல் போன்ற விடயங்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் பாராளுமன்ற உள்ளக கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

vi மேலதிகமாக, கணக்காய்வு , முகாமைத்துவ குழுவின் தீர்மானங்களை அமுல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 6) வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஒழுங்கு மரபு அலுவலகம்:

பொதுநலவாய பாராளுமன்றச் சங்கம், அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் மற்றும் சார்க் பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கம் ஆகியவற்றுடன் தொடர்பான அனைத்து செயற்பாடுகளும் சேவைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- கௌரவ சபாநாயகர், கௌரவ பிரதி சபாநாயகர், கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் மற்றும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம், உதவிச் செயலாளர் நாயகம் உட்பட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு (26) பொதுநலவாய பாராளுமன்றச் சங்கம், அனைத்து பாராளுமன்ற ஒள்றியம் மற்றும் சார்க் பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கம் ஆகியவற்றின் மாநாடுகள், பட்டறைகள், கூட்டங்கள், கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கு சமுகமளிப்பதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

- பாராளுமன்ற நட்புறவுச் சங்கங்களுடன் தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (தற்போது அவ்வாறான 44 சங்கள் இயங்குகின்றன).

- இலங்கைக்கான வெளிநாட்டு தூதுக்குழுக்களின் உத்தியோகபூர்வ விஜயங்கள் தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## 7) தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் திணைக்களம்

2013ஆம் ஆண்டில் தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பணியாட்டொகுதி ஆலோசனைக்குழு முகாமைத்துவ முறைமை, பிரவேச முகாமைத்துவ தகவல் முறைமை, உயர் பதவிக்குழு செயல் முறைமை, உணவு வழங்கல் பொருட்கள் பராமரிப்பு முறைமை, பாராளுமன்ற வலையமைப்பு பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல், பாராளுமன்ற இணையத்தளத்தை மீள்புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு, தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் விநியோகம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை உள்ளிட்ட மென்பொருள் தயாரிப்பு மற்றும் 'e-chamber கருத்திட்டம்', வரவு முகாமைத்துவ முறைமை, களஞ்சியப் பரப்பு வலையமைப்பு கருத்திட்டம் (SAN project) மற்றும் ஹன்சாட் (ஆவணம்) முகாமைத்துவ கருத்திட்டம் போன்ற பெயர் குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்களை ஆரம்பித்தல் ஆகியவையாகும்.

(2013.12.31ஆம் திகதி )

# இணைப்பு - 01

## இலங்கைப் பாராளுமன்றத்தின் நிறுவனக் கட்டமைப்பு



## இணைப்பு – 02

### *இலங்கைச் சட்டங்கள் 2013*

| SER. NO | ACT NO | NAME | DATE OF CERTIFICATION |
|---|---|---|---|
| 1. | 1/2013 | දිවිනැගුම, வாழ்வின் எழுச்சி, Divineguma | 2013-01-11 |
| 2. | 2/2013 | අපරාධ නඩු විධාන සංග්‍රහය (විශේෂ විධිවිධාන)<br>குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்)<br>Code of Criminal Procedure (Special Provisions) | 2013-02-06 |
| 3. | 3/2013 | ත්‍රස්තවාදීන්ට මුදල් සැපයීම මැඩපැවැත්වීම් සම්මුති (සංශෝධන)<br>பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயம் (திருத்தம்)<br>Convention on the Suppression of Terrorist Financing (Amendment) | 2013-02-12 |
| 4. | 4/2013 | ලංකා ශාන්ත ජෝශප් සොහොයුරන්ගේ සංගමය (සංශෝධන)<br>இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை (திருத்தம்)<br>Society of the Ceylonese Brothers of St. Joseph (Amendment) | 2013-02-21 |
| 5. | 5/2013 | වරාය සහ ගුවන්තොටුපල සංවර්ධන බදු (සංශෝධන)<br>துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்)<br>Ports and Airport Development Levy (Amendment) | 2013-03-22 |
| 6. | 6/2013 | ආර්ථික සේවා ගාස්තු (සංශෝධන)<br>பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்)<br>Economic Service Charge (Amendment) | 2013-03-22 |
| 7. | 7/2013 | සුරාබදු (සංශෝධන), மதுவரி (திருத்தம்)<br>Excise (Amendment) | 2013-03-22 |
| 8. | 8/2013 | විදුලි සංදේශ බදු (සංශෝධන)<br>தொலைத் தொடர்பு அறவீட்டு (திருத்தம்)<br>Telecommunication Levy (Amendment) | 2013-03-22 |
| 9. | 9/2013 | රේගු (සංශෝධන), சுங்கம் (திருத்தம்)<br>Customs (Amendment) | 2013-03-22 |
| 10. | 10/2013 | නැවත පදිංචි කරවීමේ අධිකාරිය (සංශෝධන)<br>மீளக் குடியமர்த்துதல் அதிகாரசபை (திருத்தம்)<br>Resettlement Authority (Amendment) | 2013-03-28 |
| 11. | 11/2013 | ජාතිය ගොඩනැගීමේ බදු (සංශෝධන)<br>நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்)<br>Nation Building Tax (Amendment) | 2013-04-23 |
| 12. | 12/2013 | මුදල්, நிதி, Finance | 2013-04-23 |
| 13. | 13/2013 | නොතාරිස් (සංශෝධන), நொத்தாரிசுகள் (திருத்தம்)<br>Notaries (Amendment) | 2013-04-23 |
| 14. | 14/2013 | ඇටෝර්නි බලපත්‍ර (සංශෝධන), அற்றோணித் தத்துவம் (திருத்தம்)<br>Powers of Attorney (Amendment) | 2013-04-23 |
| 15. | 15/2013 | මූල්‍ය කළමනාකරණ (වගකීම) (සංශෝධන)<br>நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்)<br>Fiscal Management (Responsibility) (Amendment) | 2013-04-23 |
| 16. | 16/2013 | ක්‍රමෝපාය සංවර්ධන ව්‍යාපෘති (සංශෝධන)<br>செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் (திருத்தம்)<br>Strategic Development Projects (Amendment) | 2013-04-23 |

| | | | |
|---|---|---|---|
| 17. | 17/2013 | එකතු කළ අගය මත බදු, சேர்பெறுமதி வரி (திருத்தம்)<br>Value Added Tax | 2013-04-09 |
| 18. | 18/2013 | දේශීය ආදායම් (සංශෝධන) , உண்ணாட்ரசிறை (திருத்தம்)<br>Inland Revenue (Amendment) | 2013-04-24 |
| 19. | 19/2013 | ඔට්ටු ඇල්ලීම සහ සූදු බදු (සංශෝධන)<br>பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்)<br>Betting and Gaming Levy (Amendment) | 2013-04-24 |
| 20. | 20/2013 | බදු අභියාචනා කොමිෂන් සභාව (සංශෝධන)<br>வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தம்)<br>Tax Appeals Commission (Amendment) | 2013-04-24 |
| 21. | 21/2013 | ලේඛන ලියාපදිංචි කිරීමේ (සංශෝධන)<br>ஆவணங்கள் பதிவு (திருத்தம்)<br>Registration of Documents (Amendment) | 2013-04-24 |
| 22. | 22/2013 | විවාහ ලියාපදිංචි කිරීමේ (සංශෝධන)<br>திருமணப் பதிவு (திருத்தம்)<br>Marriage Registration (Amendment) | 2013-05-08 |
| 23. | 23/2013 | උඩරට විවාහ හා දික්කසාද (සංශෝධන)<br>கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தம்)<br>Kandyan Marriage and Divorce (Amendment) | 2013-05-08 |
| 24. | 24/2013 | මුස්ලිම් විවාහ හා දික්කසාද (සංශෝධන)<br>முஸ்லிம் திருமண, மணநீக்கம் (திருத்தம்) Muslim Marriage and Divorce (Amendment) | 2013-05-08 |
| 25. | 25/2013 | උප්පැන්න හා මරණ ලියාපදිංචි කිරීමේ (සංශෝධන)<br>பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவு (திருத்தம்)<br>Birth and Deaths Registration (Amendment) | 2013-04-30 |
| 26. | 26/2013 | හඟුරන්කෙත මාදන්වල රජමහා විහාර සංවර්ධන පදනම (සංස්ථාගත කිරීමේ) ஹங்குரான்கெத மாதன்வல ரஜமகா விகரை அபிவிருத்தி மன்றம் (கூட்டணைத்தல்)<br>Hanguranketha Madanwala Rajamaha Vihara Development Foundation (Incorporation) | 2013-05-21 |
| 27. | 27/2013 | ඡන්ද හිමියන් ලියාපදිංචි කිරීමේ (විශේෂ විධිවිධාන)<br>தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்)<br>Registration of Electors (Special Provisions) | 2013-06-20 |
| 28. | 28/2013 | පාර්ලිමේන්තු ශිෂ්‍යත්ව මණ්ඩලය (ඉවත් කිරීමේ)<br>பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபை (நீக்கம்)<br>Parliamentary Scholarship Board (Repeal) | 2013-07-08 |
| 29. | 29/2013 | රාජ්‍ය ආරක්ෂක සේවා අණ සහ මාණ්ඩලික විද්‍යාලය (සංශෝධන)பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தம்)<br>Defence Services Command and Staff College (Amendment) | 2013-07-08 |
| 30. | 30/2013 | පළාත් පාලන ආයතනවල පුරප්පාඩු පිරවීමේ (විශේෂ විධිවිධාන)<br>உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்)<br>Local Authorities Filling of Vacancies (Special provisions) | 2013-07-12 |
| 31. | 31/2013 | ශ්‍රී ලංකා විදුලි බල (සංශෝධන)<br>இலங்கை மின்சாரம் (திருத்தம்)<br>Sri Lanka Electricity (Amendment) | 2013-08-07 |

| | | | |
|---|---|---|---|
| 32. | 32/2013 | විද්‍යාව හා තාක්ෂණය වැඩිදියුණු කිරීමේ (සංශෝධන)<br>விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி (திருத்தம்)<br>Science and Technology Development (Amendment) | 2013-10-25 |
| 33. | 33/2013 | ක්‍රීඩාවල යෙදීමේ දී උත්තේජක ද්‍රව්‍යය ගැනීමට එරෙහි සම්මුති<br>விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான சமவாயம்<br>Convention Against Doping in Sport | 2013-11-11 |
| 34. | 34/2013 | බෞද්ධ විහාර දේවාලගම් (සංශෝධන)<br>பௌத்த அறநிலையங்கள் (திருத்தம்)<br>Buddhist Temporalities (Amendment) | 2013-11-11 |
| 35. | 35/2013 | ධීවර සහ ජලජ සම්පත් (සංශෝධන)<br>கடற்றொழில் நீர்வாழ் உயிரினவளங்கள் (திருத்தம்)<br>Fisheries and Aquatic Resources (Amendment) | 2013-11-22 |
| 36. | 36/2013 | විසර්ජන<br>ஒதுக்கீடு<br>Appropriation | 2013-12-20 |